THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.3/2011**

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.06.2023.

**Evidence Recorded Time: 1.36 P.M. to 1.45 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கிருஷ்ணமூர்த்தி** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | ஆண்டி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**கூடுதல் முதல் விசாரணை**:-

நான் இதில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சீனியர் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் 18.11.2022 அன்று முதல் விசாரணை செய்யப்பட்டடேன். அதன் பிறகு எங்கள் வழக்கில் மிக முக்கியமான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதால் Recall மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று கூடுதாலாக எனது சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.3- | 29.11.2022 | புலனாய்வு அதிகாரியின் கடிதம் | - அசல் |
| எ.ம.சா.ஆ.4- | - | படிவம் 24 (RC No. PB46E9699) | - சான்றிட்ட நகல் |

எனவே தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

(மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ-3 மற்றும் 4 ஆவணங்கள் மனுதாரரை விசாரணை செய்யப்பட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதன் பேரில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது )

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் பிரமாண பத்திரத்தை 18.11.2022 தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். விசாரணை செய்யப்பட்ட பிறகு தான் பஞ்சாப் நேசனல் இன்சூரன்ஸ்

கம்பெனி, அமிர்தசரஸ் தகவல் கொடுத்து அதிகாரியை நியமனம் செய்தோம் என்றால் சரிதான். மேற்சொன்ன அதிகாரி 28.11.2022–ல் தான் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பஞ்சாப் அமிர்தசரஸ் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 29.11.2022–ல் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்திற்கு முதல் நாளே 28.11.2022 அன்றே நாங்கள் சரிபார்த்து விட்டோம் என்று கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரில்ல. 28.11.2022 அன்று எந்தவிதமான கடிதமும் கொடுக்காமல் நாங்களே தயார் செய்து விட்டோம் என்றால் சரியல்ல. அதனால் வட்டார போக்குவரத்து அலுவலகம் செல்லாமல் நாங்கள் தயார் செய்த ஆவணம்தான் எ.ம.சா.ஆ.3 மற்றும் 4 என்றால் சரியல்ல. மேச்சேரி காவல் நிலையம் பதிவு செய்த குற்ற வழக்கின் மீது தவறு என்று எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யான ஆவணங்களை தயார் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.